# தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:
கண்ணதாசன்

K. S. Ramu

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, மார்கழி 18 (2-1-'60). சனிக்கிழமை | இதழ் 29

## வெல்லும் செயல்தான் காதலா?

### —ஒரு சிந்தனை.

**கா**தல், தூய்மையான ஒரு சொல்; செயல்.

இரு உயிர்களின் இதயத் துடிப்பு!

இரண்டு உள்ளங்கள் ஒன்றுகொன்று பரிமாறிக்கொள்ளும் கூட்டு வியாபாரம். அது எப்பொழுதும் எவ்விடத்தும் எவரிடத்தும் ஏற்படக் கூடியதல்ல! குறிப்பிட்ட ஒரு உயிர் மற்றொரு குறிப்பிட்ட உயிரிடம் மட்டுமே கொள்ளும் ஒரு அன்புப் பின்னல்; அதுதான் காதல்!

கண்ணும் கண்ணும் பார்க்கின்றன. உண்மை. அந்தப் பார்வையில் வெறும் சதைகள் மட்டும் காணப்படவில்லை. உயிர்-உள்ளம்-துடிப்பு ஆகிய அத்தனையும் தெரிகின்றன. அதுதான் காதல்!

இளமை ஆரம்பிக்கிறது என்பதற்கு அறிகுறியே அப்போது ஏற்படும் காதல்தான். எனவேதான், இதுவரை இல்லாத புதிய உணர்ச்சிகள் உடலில் குறுகுறுக்கும்போது இளமை அதற்கு அடிமையாகிறது. போராடத் துணிகிறது. விளைவு மணமேடை, சாக்காடு, நீதிமன்றம், போர்க்களம் எல்லாம்!

இரண்டு உயிர்கள் ஒன்றை ஒன்று உணர்ந்து, புரிந்து, பழகி உறவாட முனைவது காதல்! அதன்பின்னர் ஏற்படும் செயல்கள்தான் வெறி, பசி, பித்தம், மயக்கம் முதலியன. எனவே முதலில்காதல்; பின்னர் பசி!

இளமையிலே வருவதுதான் காதல்.

இதற்குமேல் ஏற்படுவதெல்லாம் கடமை, போராட்டம் முதலியவையே!

காதல் வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும். ஒரு உயிரிடம் மட்டுமே வரும். பலமுறை பலரிடம் வருவது காமம்! தெளிவாகச் சொன்னால் சபலம்! அது எப்படிக் காதலாகும்?

மும்தாஜிடம் உள்ளத்தைக் கொடுத்தான் ஷாஜகான்; தாஜ்மகால் எடுத்தான்!

அனார்கலியிடம் உயிரை வைத்தான் சலீம்; கல்லறைசமைந்தது!

லைலாவிடம் அன்பைக் கொட்டினான்; கயஸ் மஜ்னு ஆனான்!

இப்படி அம்பிகாபதி-அமராவதி! தேவதாஸ் பார்வதி!

காதலுக்குச் சாட்சியாக இருக்கும் கணக்குகள் இவை. இன்னும் நமக்குத் தெரியாமல் எத்தனையோ!

இவர்களது காதல் சாவில், அதாவது தோல்வியில், முடிந்ததால் உலகின் நினைவில் சாகாநிலை பெற்றன. அவர்களை எளிதில் மறக்க முடியாதபடி ஆக்கின. ஆனால் சமீபத்தில், சீனாவில் சாதாரண ஒரு ஏழைப் பெண்ணின் கடைக்கண் பார்வைக்காகத் தனது பரம்பரை அரச போகத்தையே துறந்து அவளுடன் வந்து சாதாரண வாழ்க்கை நடத்தும் அவனை - அக்காதலர்களை - எத்தனை பேர் இதயத்தில் நிறுத்தி வைத்துள்ளனர்? இளவரசி மார்கரெட்டின் காதல் பிரச்னையும் இப்படித்தான் இப்படி எத்தனையோ!

எனவே தோல்வியடைவது மட்டும் காதலல்ல;

வெற்றி பெறுவதும் காதல்தான்!

நிறைவேறாதது மட்டும் காதலல்ல;

நிறைவேறுவதும் காதல்தான்!

இளமைக் காதல் வற்றாத ஜீவநதி. அதன் கிளைகளாகக் குடும்பம் பொறுப்பு, தொல்லை என்ற கால்வாய்கள் பிரிந்துவிடுவதால் நமக்கு சில சமயங்களில் அது கானலாகத் தோன்றலாம். ஆழ்ந்து கவனித்தால் பசுமை நிறைந்த சோலைகள், அதில் பதுங்கிக்கிடப்பதைக் காணலாம். வாழ்வின் தத்துவமும் புதைந்து இருக்கும்.

இளமையான இரண்டு இருதயங்களின் பிணைப்பே காதல். எனவே இளமைக்காதலுக்கு இருதயமே தலைவன்.

கன்னியை மனைவியாக்கிக் கொள்வது பசி.

கன்னியை மனைவியாக்க எண்ணுவது அல்லது துணிவது, காதல்!

பசியின் விளைவால் கன்னி அன்னையாகிறாள். காளை தந்தையாகிறான். அந்த அன்னையிடம் தந்தை காண்பது காதலல்ல-கடமை! கன்னியாக இருந்தபோது ஏற்பட்ட காதல், இப்போது கடமையாக மாறிவிடுகிறது. இந்தக் கடமையைக் காதல் என்றும் கூறுவதில் தவறில்லை!

கன்னி அன்னையானபின் அவள் கடமையும் பொறுப்பும் வாய்ந்த நிரந்தர வேலைக்காரியாகி விடுகிறாள். காளையும் தந்தையானபின் நிரந்தர உழைப்பாளி ஆகிவிடுகிறான். இங்கே 'கடமை', 'பொறுப்பு' என்கிற போர்வையில் 'காதல்' என்ற நூல் பின்னிவிடுகிறது. கூர்ந்து கவனித்தால் அந்தக் 'காதல்' என்ற நூல் இழைகள் ஒன்றுசேர்ந்து, கடமை பொறுப்பு அடங்கிய போர்வையாக மாறுவதைக் காணலாம்.

நிறைவேறாத காதலெல்லாம் கசப்பாக இருப்பதால்தான் நம் நினைவில் நீண்டு நிற்கிறது. நிறைவேறிய காதலெல்லாம் இனிப்பாக இருப்பதால் நினைவில் நில்லாமல் வாழ்வில் இரண்டறக் கலந்துதேய்ந்து மாய்ந்து விடுகிறது.

காதல்-தோல்வியடைந்தாலும் வெற்றி பெற்றாலும் தூய்மையும் உயர்வும் கொண்டது, அது உண்மையான காதலாக இருந்தால்!

என் எண்ணம் இதுதான்: இளமையில் ஏற்படுவதுதான் காதல்!

இதற்குப் பின்னர் ஏற்படுவதெல்லாம் கடமை!

காதல் செய்யத் தெரியாதவன் முட்டாள்.

காதலிக்கப் பயப்படுபவன் கோழை!

"ஆதலினால் காதல் செய்வீர்; உலகத்தீரே
அஃதன்றோ இவ்வுலகத் தலைமையின்பம்!"

—அவினாசி ஆரசுமணி.

# என்ன ஜீ ஓலம்?

# உறவை வளர்ப்பீர்; உதவியைப் பெறுவீர்! நடைமுறை மாறினால் நல்லவை வளரும்!

சென்னை அரசினரின் பதிவு செய்யப்படாத ஊழியர்கள் டிசம்பர் மூன்றாம்நாளில் தங்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நீண்டநாள் விருப்பத்தை மீண்டும் ஒருமுறை வெளிக்காட்டியிருக்கிறார்கள். ஊர்வலங்கள் பொதுக்கூட்டங்கள் கண்டனத் தீர்மானங்கள் விண்ணப்பங்கள் தயாரித்தல் எல்லாம் நடைபெற்றுள்ளன! பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் பல நிகழ்ச்சிகள் மாநிலமெங்கும் நடந்தேறியுள்ளன. தங்களுக்கோர் இடைக்கால நிவாரணமாக ரூ. 25 ஊதியம் தரப்பட வேண்டுமென்ற அரசுஊழியரின் வேண்டுகோளை அமைச்சர் பக்தவத்சலம் மிக அவசரமாகப்பரிசீலித்து, ஊதிய நிர்ணயக் குழுவின் அறிக்கை விரைவிலேயே வரவிருப்பதால் இடைக்கால உதவி தேவையில்லை என்று சட்ட மன்றத்திலே அறிவித்துவிட்டார்! மத்திய சர்க்கார் எனப்படும் தில்லி அரசினரின் சேவகர்கள் பெறுகின்ற ஊதியத்தைச் சிறிதளவு உயர்த்திக் காட்டலாம் என்ற சம்பளக் குழுவின் தீர்ப்பு மாநில ஆட்சியினரின் ஊழியர்களுக்குப் பொருந்தாது என்றும் சொல்லப்படுகிறது. மத்திய அரசினரின் ஊழியர்களுக்கும் கூட, அந்தக் குழுவின் தீர்ப்புகள் நிறைவளிக்கவில்லை நிம்மதியைத்தரவில்லை என்றே புலப்படுகின்றது. அவர்களைப் போலவே மதிக்கப்பட வேண்டும் என்ற சென்னை அரசினரின் ஊழியர்கள் தங்கள் முயற்சிகளைப் பல ஆண்டுகளாகவே வலியுறுத்தி வருகிறார்கள். இவர்களுடைய வேண்டுதலிலே உள்ள சாதகபாதகங்களை அரசினர் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்குச் சொல்லி வருகின்ற நிரந்தரமான ஒரு காரணம் 'நிதிநிலைமை சரியில்லை' என்பதுதான்! புதிய காரணம் எதுவும் சொல்லப்படுவதில்லை என்பது அரசினர் ஊழியர்களுக்கும் நன்றாகத் தெரியுமென்றாலும் தங்களுடைய கோரிக்கைகளை அடிக்கடி புதுப்பிக்கத் தவறுவதில்லை. இந்த அரசிலே யிருக்கும் சற்குணசீலர்களுக்குப் புரிந்து கொள்ளும் சக்தி குறைந்த அளவுக்குக்கூட இல்லையென்று சந்தேகப்படுமளவுக்கு அரசினர் ஊழியர்கள் சங்கடப்படுகின்றனர்.

சென்னை அரசினர் ஊழியர்கள் அனைவரும் தங்களுடைய தற்போதைய வாழ்வினையும் தங்களுடைய எதிர்காலத்தையும் அங்கே அமையப்போகும் புதுவாழ்வினையும் எண்ணிப் பார்ப்பதில் தவறில்லை. தங்களுக்குள்ள துன்பத் தொடர்கதையின் முடிவினை விரைவிலேயே காணத்துடிக்கிறார்கள். அரசினர் ஊழியர்கள் ஏழ்மை நிலையிலே வதைப்படுகிறார்கள்; அரசினரால் வஞ்சிக்கப்படுகிறார்கள் என்ற உண்மையினைப் பொதுமக்கள் முழு அளவுக்கு உணர்ந்துவிட்டார்கள் என்று எவரும் நம்பத் தயாராக இல்லை. அரசினர் ஊழியர்கள் தங்களின் தாழ்ந்த நிலைமையை பல வகைகளிலே தெரிவிக்கும் முறையில் மாநாடுகளைக் கூட்டி மக்களுக்குச் சில செய்திகளைச் சொன்னார்கள்! ஏன் என்று கேட்போரின் தொகை அதிகமாக இல்லை! சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னால் தங்களின் குரலைக் கொஞ்சம் உயர்த்திக் காட்டினார்கள். அரசியல் கட்சித் தலைவர்களை அணுகாதவர்கள் அணுகுவதற்கு அனுமதிக்கப்படாதவர்கள், மதுரையிலே நடைபெற்ற மாநாட்டில் அறிஞர் அண்ணா, ராமமூர்த்தி, சி. சுப்பிரமணியம் ஆகியோரை அழைத்தனர்; தங்கள் நிலைமையினைத் தெரிவித்தனர். நிதி அமைச்சர் அவர்கள் அழைப்பை அலட்சியப் படுத்தினார்போலும்; அங்கே வரவில்லை! அரசியல் கட்சிக்காரன் தொடர்பினை அரசினர் ஊழியர்கள் தேடிப்பெறுவதை ஏற்காத அரசு தன் எண்ணத்தைக் கடுமையாக்கிக் கொண்டது. சென்னையிலேயே நடைபெற்ற மாநாட்டில் முதலமைச்சர் எனப்படும் கனம் காமராசர் அவர்களும் தன்னுடைய தத்துவரீதியான விளக்கத்திலே தன் அரசு ஊழியர்களைக் கண்டித்தார்; எச்சரிக்கைகளை அனுப்பினார்! பொதுத் தேர்தலுக்கு முன்னால் தேர்தல் நேரத்தில் தங்களுடைய ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் இந்தக் கேடுகெட்ட அரசினருக்குத் தரக்கூடாதென்பது அரசு ஊழியரின் ஆவலாக இருந்தது. தேர்தல் வாக்குப் பதிவுச் சாவடிகளில் "ஆட்சியாளரால் புறக்கணிக்கப்பட்ட என். ஜி. ஓ." என்று பொறிக்கப்பட்ட அட்டைகளை மார்பிலே அணிந்து செல்ல முடிவெடுத்தனர். அரசு கொஞ்சம் யோசித்தது. பொதுமக்கள் இந்தக் காட்சியினைக் கண்டுவிட்டுத் தங்கள் வாக்குகளைத் தங்களுக்கு வழங்காமல் தடுப்பதை மாற்றியமைக்க ரூ. 25 ஊதிய உயர்வு தருவதற்கு இசைவு தந்தனர். தீவிரத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது.

சென்னை அரசினர் ஊழியர்கள் 'ஆகட்டும் பார்க்கலாம் அரசு' மாறிப் புதியதோர் அரசு வருமென்று நம்பியிருந்தால் அதில் தவறில்லை. ஆனால் தமிழ்நாட்டுப் பொதுமக்கள் தங்களுடைய வாக்குகளை வழங்காமல் விலைக்கு விற்றுவிடும் விபரீத நிலையிருப்பதால் புதிய அரசு ஏற்படவில்லை. அரசு ஏற்படாவிட்டாலும் அரசு ஊழியர்கள் தங்கள் முயற்சிகளை விட்டுவிட முடியவில்லை. எனவேதான் அவர்கள் தங்கள் முயற்சிகளை மேலும் துரிதப்படுத்த வேண்டிய அவசியத்திலே இருக்கிறார்கள். ஆனால் அரசு எந்த வழிக்கும் வரத்தயாராக இல்லை. கெஞ்சினால் மிஞ்சுகிறார்கள்; மிரட்டினால் அடக்கிவிடுகிறார்கள். அரசு ஊழியர்களின் முக்கியப் பொறுப்புகளை எவரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அரசிலேயிருக்கும் அமைச்சர்கள் அழகுபடப் பலமுறை சொல்லியிருக்கிறார்கள்; அதே வேளையில் அவர்களுடைய குறைகளைக் களைந்திடத் துணிவதில்லை. நிதி அமைச்சரும் மறுக்கிறார், நிதிக்குத் தொடர்பில்லாத மற்ற மந்திரிகளும் மறுக்கிறார்கள்! சென்னை அரசினர் ஊழியர் எத்தனை வகையில் தங்கள் எதிர்ப்புகளைக் காட்டினாலும் எதுவும் சாதிக்க முடியாதவர்கள் என்ற உண்மையினை அரசு மிக நன்றாகக் கணக்கிட்டு உணர்ந்து வைத்திருக்கிறது. கூட்டணியாக நின்று எதிர்ப்பினைக் காட்டும் வலிமையிலே அரசினர் ஊழியர்களின் ஒற்றுமை இல்லை. அவர்களுடைய பலமாநாடுகளிலே இதனைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசிச் சலித்துவிட்டார்களே தவிர, செயலில் காட்டுவதற்குத் தவறிவிட்டார்கள்! அஞ்சல் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது அகில இந்தியாவும் அலறித்துடித்ததை சென்னை அரசு ஊழியர்களும் அறிவார்கள்! கூட்டு முயற்சியும் ஒற்றுமைப் பண்பும் போதுமான அளவுக்கு இல்லை என்பது முக்கியம். மற்ற மற்ற கிளர்ச்சிகளுக்குக் கிடைக்கும் பொதுமக்களின் ஆதரவு' சென்னை அரசினர் ஊழியர்களுக்குக் குறைந்த அளவில கூட கிடைப்பதில்லை என்பது இரண்டாவது முக்கியக் காரணமாகும். பொதுமக்களுக்கும் சென்னை அரசு ஊழியர்களுக்கும் இடைவெளி அதிகம் இருப்பதினாலேதான் அரசினர் அவர்களைச் 'சாதாரணங்களாக' மதிக்கிறது.

சென்னை அரசினர் ஊழியர்கள் செயலாற்றுவதிலே வல்லவர்கள் தான். ஆனால் செயல்படும் முறைகளிலே குறைகளை நிறைய வைத்திருக்கிறார்கள். அரசில் எத்தனையோ துறைகளில் பொறுப்பேற்றுள்ள ஊழியர்கள் இதனைச் சிறப்புற அறிந்துள்ளார்கள்; ஆனால் களையத் துணியவில்லை! பல ஆண்டுகளுக்குப் பிறகும் இவர்களைப் பதிவு செய்யப்படாதவர்களாக அரசு மதிப்பிடுகிறது. விலைபோகாத சரக்குகளாகவே இருக்கிறார்கள்! பொதுமக்களிடமிருந்து வேறுபடுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகம். அவர்களிலே அரசினர் ஊழியர்கள் சிறப்பான இடம் பெறுகிறார்கள். எந்த ஒரு காரியமும் சாதாரணக் குடிமகனின் விழைவுக்கேற்ப நிறைவேற்றித் தரப்படவில்லை. "அந்தந்த அலுவலகங்களைப் பலமுறை முற்றுகையிட்டு, காணிக்கைகளை வைத்தால் எந்த ஒரு காரியமும் வெகு சுலபமாக முடிந்துவிடும் - தகாத காரியங்கள் கூடத் தடையின்றி நிறைவேறும்" என்ற எண்ணம் எல்லோரிடத்திலும் வளர்ந்துவிட்டது! பதிவு செய்யப்பட்ட அதிகாரிகளும் பதிவு செய்யப்படாத அதிகாரிகளும், அதிகாரிகள் ஆகமுடியாத ஊழியர்களும் இந்தப் பெரும் பழிக்குத் தங்களைத் துணையாக்கிக் கொண்டுள்ளார்கள்! பொதுமக்களை நேரடியாகப் பாதிக்கும் வரிவிதிப்புத் துறைகளைப்

## கூடலரசன்

பற்றியும் வசூலிக்கும் வகைகளைப் பற்றியும் தொகை தொகையான செய்திகள் கிடைக்கின்றன; தொல்லைகளின் உறைவிடமாக இருக்கின்றன! மிகச் சாதாரணச் சான்றாக கிராமப் பகுதிகளில் அழைக்கப்படும் 'டூரிங்சினிமா' விவகாரங்களை எடுத்துக் கொண்டாலே போதும்! ஒரு விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கு அனுமதி வழங்கப்படும் வரையிலும் அந்த விண்ணப்பத்தின் உரிமையாளர் படும் அவதிகளைக் கணக்கிட முடியாது! ஒவ்வொரு கலைக்டர் அலுவலகத் தாழ்வாரங்களிலும் எப்போதும் பலர் காத்துக்கொண்டிருப்பார்கள். அவர்களிலே சினிமா லைசென்சு, துப்பாக்கி லைசென்சு, சீனிப்பெர்மிட், காண்ட்ராக்ட், இப்படிப் பலரகமான செய்திகளைச் சுமந்து கொண்டு உத்திரவுகளுக்காகக் காத்திருப்போரே அதிகமாக இருப்பார்கள்!

சென்னை அரசு ஊழியர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவரச் செய்கிறார்கள் என்று ஒத்துக்கொள்ளப் பொதுமக்கள் நிரம்பவும் சங்கடப்படுகிறார்கள். அவர்கள் நடத்துகின்ற பொதுக் கூட்டங்களுக்கு அரசினர் ஊழியர்களிலே பலரும் வராமல் இருந்துவிடுவது போலவே, பொதுமக்களும் பொருட்படுத்துவதில்லை. சில பதிவுசெய்யப்

— 7-ம் பக்கம் —

## என் தாய்

★

எழுத்தாள நண்பர்கள், தமது தாயைப்பற்றி வசன கவிதையாகவோ கவிதையாகவோ எழுதி அனுப்பலாம். அது வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பதாகவோ, பொதுவான பெருமைகளைச் சொல்வதாகவோ இருக்க வேண்டும். கவிதையாக இருந்தால் 32 வரிகளிலும் வசனகாவியமாக இருந்தால் 62 வரிகளிலும் அமையட்டும். தாயார் மட்டும் இருக்கும் இடுப்பளவு புகைப்படத்தை உடன் அனுப்பி வைக்கவேண்டும். அப்படங்கள் "கார்ட்" அளவில் இருத்தல் நலம். தவருது புகைப்படம் அனுப்புக. இறுதிநாள்: 9-1-60.

—கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 2-1-'60 ‖ இதழ் 28

# அமைச்சரே, கவனியுங்கள் அண்ணாவை!

ஆறுகளையும் குளங்களையும் வைத்துக்கொண்டு "மிடுக்குமொழி" பேசும் சீமான்களுக்கு இது ஒரு சோதனைக்கட்டம். பிறந்த தாய்நாட்டை மறந்து பிற நாட்டு வீதிகளிலே பதவிப் பிச்சைக்கேங்கி நிற்கும் சீராளர்களுக்கு இது ஒரு தொல்லை நேரம், அடுத்த தேர்தலில் யார் வருவார்-யார் போவார் என்ற கவலையற்றவர்களுக்கு இது கவலைப்பட வேண்டாத பிரச்னை. ஆனால் பதவியையும் பதவி தரும் இன்பத்தையும் கருதுவோருக்கு இது ஒரு வேதனைதரும் காலம்.

கடந்த திங்களன்று அமைச்சர் சுப்பிரமணியம் அனைத்து இயக்கத்தவரையும் அழைத்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றி ஆலோசித்திருக்கிறார். நமது கழகத்தின் சார்பில் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு, தென்னக மக்களின் கருத்தைத் தெளிவாக வலியுறுத்தியிருக்கிறார்கள்.

தமிழகத்தின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டு வருவதை நாம் மட்டுமல்ல; நம்மையாளும் நாவல்ல சுப்பிரமணியரும் நன்கு அறிந்தேயிருக்கிறார். வெளிப்படையாக அவர்தம் கருத்துக்களைச் சொல்லமுடியாவிடினும் வாய்ப்பேற்படும் போதெல்லாம் சொல்லிவந்திருக்கிறார். மேட்டுப்பாளையத்தில் நடந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய கருத்தரங்கில் கல்வி அமைச்சர் அவர்கள் தென்னகத்தில் தொழிற் கல்லூரிகள் குறைவாகவே நிறுவப்படுகின்றன என்ற குற்றச்சாட்டைச் சாட்டியதை அவாள் ஏடுகள் மறைத்தன; எனினும் நாட்டுமக்கள் அக்கருத்தை அறியும் வாய்ப்பை ஒருசில ஏடுகள் உண்டாக்கித் தரத்தான் செய்தன. அதே அமைச்சரும் மற்றொரு ஏரிக்கரை அமைச்சரும் வேறு பலரும் தில்லிக்கு ஒருமுறை சென்றிருந்தனர், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்குரிய பங்கைப் பெற்று வருவதற்கு. அப்போது தில்லியில் நிதி அமைச்சராக இருந்த டி. டி. கே. அவர்கள் வீட்டில் பிச்சையெடுப்பதற்கு முதல் நாள் கூடிப் பேசிய இவர்கள், "40) கோடிக்கு ஒரு சல்லி குறைந்தாலும் பெற்றுக்கொள்ளப் போவதில்லை. இது உறுதி; அறுதியிடப்பட்ட முடிவு! இதிலிருந்து தளரோம்! இதை எப்படியும் பெறத் தவறோம்! தவறோம்!" எனக் முழக்கிக்கிழித்தனர். அதில் மயங்கிய நமது நிதி அமைச்சரும், "ஆகா விட்டேனா பார்! விடாக்கண்டன் என்ற பெயரோடு, வெற்றிமாலை சூடி வருகிறேன் பார்;" என்றார்த்தார். கடைசியில் அது தேய்ந்து கட்டெறும்பான கதையை நாடறியும். இப்படி வாய்ப்பு ஏற்படுகிறபோதெல்லாம் கோட்டை விட்டுவிட்டு," இந்த அண்ணாத்துரை 2000 கோடி கேட்பதன் பொருள் என்ன? நம்மிடம் எந்தக் குளம் இருக்கிறது? எந்த ஆறு இருக்கிறது?" என்று இவர்கள் பேசிய வெட்டிப் பேச்சையும் நாடறியும்.

இதை உணர்ந்துதான். அண்ணா அவர்கள் முன்கூட்டியே இப்போது எச்சரிக்கை தந்திருக்கிறார்கள். அமைச்சர் ஆசை 300 கோடி அளவில் நிற்பதாக அறிகிறோம். அத்தோடு "மாநில அரசின் அதிகாரத்திற்குட்பட்டுச் செலவழிக்கத் தக்க இனங்களுக்குமட்டும் வரையறுத்து வற்புறுத்தினால் போதும்" என்று அமைச்சர் கருதுவதாக அவர் பேச்சு காட்டுகிறது. அண்ணா அவர்களோ தில்லிக் கொற்றத்தினர் அதிகாரத்திற்கு உட்பட்டுச் செலவழிக்கப்பட வேண்டிய தொகையையும் வரையறுத்து வற்புறுத்தச் சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசு அதிகாரத்தில் ரு 500 கோடியும், தில்லி அரசு அதிகாரத்தில் ரு 500 கோடியும் ஆக 1000 கோடி ருபாய் தமிழகத்திற்குச் செலவழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். அமைச்சர் கேட்கலாம், "அவ்வளவு பணத்தை வாங்கி என்ன செய்வது?" என்று. அதற்கும் அண்ணா தக்க திட்டங்களைத் தந்திருக்கிறார். அமைச்சர் என்ன செய்வார்? அவர் சார்ந்திருக்கும் தமிழ்நாட்டாட்சி ஆண்மையுள்ளதுதானா?

பொறுத்திருந்து பார்க்கலாமே! ★

## என் தாய் — 1 —

என் தாயை யானறியேன்; புவியின் மீது
ஈன்றெடுத்த ஈராறில் எனை மறந்து,
கண்மூடிச் சென்றிட்டாள்; கனவில் கண்ட
கதையாகிப் போனதையோ, எந்தன் வாழ்வில்;
பண்பாட உணவருந்த வில்லை யானும்;
பாலுண்டு தாலாட்டுப்பெற்றேன் இல்லை!
கண்ணிற்கு மையிட்டு அழகுசெய்து
'கதலி' என எனைப்புகழயாருமில்லை.

தொட்டிலிட்டு யானறியேன்; தாயின்கையால்
தொட்டணைத்து முத்தமதைப் பெற்றேனில்லை!
கட்டிலிலே யானுறங்க உடன்உறங்கி,
கதைசொல்லி உள(ம்)மகிழ்ந்து இன்பம்பொங்க
பட்டுதனில் படுத்தறியா என்னைக்கூடப்
பாராளும் மன்னவன்நீ என்றுசொல்லும்
பெற்றதாய் தனைக்காணேன்; கண்கள்செய்த
பெரும்பழிதான் அதற்கினிநான் என்னசெய்வேன்?

வீதிதனில் சென்றிட்டால் மாந்தர்கூட்டம்,
விழிகளிலும் அனுதாபம் சிறிது மின்றி
'கோதையின் மகனிவனா? பாவம்செய்தான்;
கொன்றிட்டான், பிறந்தவுடன் தாயை''என்னும்
தாயிழந்து நீர்சொரியும் எந்தன்கண்ணில்
'தார்'கொண்டு பாய்ச்சுகிறார் எங்குசொல்வேன்?
பார்புகழும் மகனிவன்தான் எனப்பண்பாடிப்
பாய்ந்தணைக்கும் தாய்அன்பைப் பெற்றேனில்லை!

குறைந்திட்ட மதிபோன்று வாழ்வில்தேய்ந்து,
குன்றிட்டேன். வன்மொழியை நாளும்கேட்கும்
பிறர்தூற்றும் பெண்ணொரு மனையாய்க்கொண்டு
பித்தனெனச் சுற்றுகின்றார் எந்தன்தந்தை.
கரமிழந்த முடவன்போல் கண்கலங்கி
கருத்தழிந்த என்தந்தை வெறிக்குணத்தால்
பறையெனவே என்உடல்தான் கிழியும்போது
"பார்தாயே! எங்குற்றாய்? ஐயோ! என்பேன்."


—கோவி. கார்முகில்

## ஒரே நாள் - ஒரே ராசி - பலன்?




கடக ராசிக்கு மன அமைதி, பெரும் தனவந்தர்களுடன் உறவு, அதிக வருமானம், பந்துக்களிடம் செல்வாக்கு, மற்றும் எல்லா அம்சங்களிலும் சாதகமான பலன்களை எதிர் பார்க்கலாம்... வர்த்தகத்தில் நிலைமை சுருசுருப்பாகவும் லாபகரமாகவும் இருந்து வரும். தங்கம், வெள்ளி, பருத்தி, நூல், எண்ணெய் இவை தொடர்புள்ளவர்களுக்கு அதிக லாபம் கிடைக்கவும் கூடும். உத்தியோகத்தில் தன் விருப்பத்திற்கு முக்கியஸ்தர்களது ஆதரவு கிடைக்கும்.

[27-12-59ந்-தேதி சுதேசமித்திரன் இதழில் "ராசிப் பலன்" என்ற தலைப்பில் வெளியானது.]




சென்ற வாரத்தில் முடிவு பெறாத காரியங்கள் இந்த வாரத்திலும் தாமதப்படும்...... ஆத்ம நண்பர்களைத் தவிர மற்றவர்களிடம் உதவிகளை எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. தொடர்புள்ள பழைய அலுவல்களைத் தவிர புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடாமலிருப்பது நல்லது......முடிவு பெறாத விஷயங்களால் மனதில் வீணாகக்கவலைகளிலிருந்து வரும். கணவன், மனைவி இவர்களிடையே சாதாரணவிஷயங்களை முன்னிட்டு, வீணான மனஸ்தாபங்களும் உண்டாகலாம்.

[27-12 59 ந்தேதி தினமணி இதழில் "இந்த வார ராசிபலன்" என்ற தலைப்பில் வெளியானது.]

இலங்கை மடல் :

# துயரால் குழம்பித் தவிக்கும் இலங்கை நாடு நல்மாலுமி இல்லாக் கலமானது !

## வருகிறது பொதுத்தேர்தல் !

நமது நிருபர்

இலங்கை அரசியல் அவ்வப்போது சிக்கலான கட்டங்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது. இன்று ஏற்பட்டிருக்கும் சிக்கல்கள் உலகையே ஈர்த்திருக்கின்றன. எதிர்காலம் அறுதியிட்டுச் சொல்லமுடியாத அளவு உருவாகிக்கொண்டிருக்கிறது.

**தக(ாத) நாயக்கே !**

இலங்கையின் இன்றைப் பேரமைச்சர் தக நாயக்கே ஆவார்.

சிங்களத்துச் சிக்கலெல்லாம் எடுத்த மொத்த உருவம்தான் அந்நாட்டின் பேரமைச்சர் தகநாயக்கே. காலியில் பிறந்து 55 ஆண்டுகளைக் கடந்து விட்ட இவர் பதவி ஏற்பதற்குமுன் காட்சிக்கு எளியவராய் இருந்தார். இன்னும் மணமாகாத இவரது வாழ்வில் இருபத்தைந்து ஆண்டுகள், காலி செயின்ட் அலாய்சசு கல்லூரி ஆசிரியப் பதவியில் கழிந்தன. சாதாரண சிப்பாவும், நாலு முழ வேட்டியும், இவரது ஆடைகள். பதவிஏற்பதற்கு முன் நடந்தும் ரிக்சாக்களில் சென்றும் பொதுப் பணியாற்றிய இவர் இப்போது அரசினரின் கெடில்லாக் காரில் உலா வருகிறார்.

பதவிக்கு வந்தபின் எந்த மனிதனும் மனம் மாறி விடுவான் என்பது இவரைப் பொறுத்துப் பொருத்தம். இப்போது அவர் கொண்டிருக்கும் பல கொள்கைகள் தமிழர் சமுதாயத்திற்கும், இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்திற்கும் கேடு பயப்பனவாகும். கொள்கைகள் சில இவை:—(1) தேயிலைத் தோட்டங்களைத்தேசியமயமாக்குவதில்லை. (2) தனியார் நடத்தும் பள்ளிகளை அரசினர் வலிந்து மேற்கொள்ளுவதில்லை. (3) பௌத்த சாசனக் குழுவின் சிபாரிசுகளை குருபீடங்களின் இசைவின்றி நடைமுறைக்குக் கொண்டுவருவதில்லை. (4) அரசினர் ஊழியர்களுக்கு அரசியலில் ஈடுபடும் முழு உரிமைகளை வழங்குவதில்லை. (5) வணிகத் துறையில் இப்போது கூட்டுறவு சபைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பிரிவுகளில் தனியார்க்கும் இடமளிக்கப்படும்.

இவரை ஓர் ஏடு 'பயங்கரமான பிசாசு' என்று வருணித்துள்ளது.

**கலைக்கப் பெற்ற பாராளுமன்றம்**

பேரமைச்சர் தகநாயக்கே தம் மூப்பாக செய்த சில பல செயல்கள் அரசியலில் அதிர்ச்சியை வளர்த்திருக்கின்றன. அவர் பராளுமன்றத்தையும் கலைத்திருக்க வேண்டியதில்லை. அத்தோடு நில்லாது ஐந்து அமைச்சர்களை வேறுவிலக்கியிருக்க வேண்டியதில்லை.— இப்படி ஒரு சார்பினர் கருதுகின்றனர். எவர் எப்படிக் கருதினாலும், ஏற்கனவே குழப்பத்திற்குப் பெயர் போன இலங்கை அரசியல் மேலும் குழம்பி விட்டது. பின்வந்த சில செய்திகள் அரசியலில் மக்கள் இனிமேலாகிலும் ஒருமாற்றத்தைக் காண விழைகின்றனர் என்பதைக் காட்டுகின்றன. அன்மையில் நடந்துமுடிந்த கொழும்புநகராட்சித் தேர்தல்களின் முடிவுகள் வியப்பிற்குரியனவாய் உள்ளன.


கலைக்கப்பெற்ற பாராளுமன்றத்தில் இருந்த கட்சிகளின் நிலவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| லங்கா சம சமாசக்கட்சி | 14 |
| தமிழர் சமஷ்டிக்கட்சி | 8 |
| (முன்பு பதவியிலிருந்த கட்சி) யூ என். பி | 5 |
| கம்யூனிஸ்ட் (ஒருவர் தமிழர்.) | 3 |
| காலி இடம் | 4 |
| நியமனம் | 6 |
| பிலிப்குணவர்த்தன குழுவினர் | 5 |
| சுயேச்சை | 7 |
| தலைவர் | 1 |
| விமலவிசயவர்த்தன | 1 |
| எஸ். எல். எப். பி (ஒருவர் இரண்டு இடங்கள் பெற்றிருக்கிறார்) | 46 |

பாராளுமன்றத்தில் ஐந்து இடங்களே பெற்றிருந்த யூ. என். பி. கட்சி, கொழும்பு நகர சபையில் எதிர்பாராத முறையில் 23 இடங்களைத் கைபற்றியிருக்கிறது. எஸ். எல். எப். பி. ஒரே இடத்தைப் பெற்றிருக்கிறது. ஈழத்துப் பொதுவுடைமையருள் தலைமையானவரும், பாராளுமன்ற அங்கத்தவருமான பீட்டர் கெனமென் அவர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்றது பெரும் வியப்பே. இவர் கடந்த பன்னிரண்டாண்டுகளாய்த் தொடர்ந்து இச்சபையில் அங்கம் வகித்து வந்திருக்கிறார். ஆக முன்பு ஆட்சியிலிருந்த யூ. என். பி. கட்சியினரே மறுபடியும் வரும் பொதுத் தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்தால் வியப்பில்லை. இலங்கை மக்கள் அரசியல் தெளிவினையும், அரசியல் கட்சிகளின் போக்குகளையும் தெளிவாகக் கணிப்பது கடினமே. ஆட்சியில் இன்றைக்கிருப்பார் நாளைக்கிருப்பார் என்று எண்ணத் திடமில்லை. இத்துணைச் சிறுநாட்டில் இவ்வளவு குழப்பங்களிருப்பது நல்ல எதிர் காலத்திற்கு அறிகுறியில்லை.

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி**

மாண்டுபோன பண்டாரநாயக்கே தொடங்கி அங்கம்வகித்த கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. அவர் காலமானபின் அக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி, அவரது மனைவி ஸ்ரீமாதேவி வேண்டிக் கொள்ளப்பட்டார்; ஆனால் அவர் மறுத்துவிட்டார். எனவே பண்டார நாயக்காவுடன் அமைச்சராக இருந்த சி. பி. டிசில்வா அவர்கள் அப்பதவிக்கு ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தலைமை ஏற்க மறுத்த ஸ்ரீமாதேவி, இயக்கத்தின் புரவலராக இருக்க ஒப்பியுள்ளார்.



எதைப் பற்றியும் கவலைப்படாதிருந்தார் இவர்;
இவரால் இப்போது கவலைப்படுகிறது நாடு.

**பொதுத் தேர்தல்**

பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின், ஓரளவு எதிர்க் கட்சியினருக்கு மகிழ்ச்சியே. ஆனால் சில அமைச்சர்கள் தங்களைக் கலக்காமல் பாராளுமன்றத்தைக் கலைத்ததைக் கண்டித்தார்கள். பொதுவுடைமையரான பீட்டர் கெனமன் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளுக்குத் தலைவணங்கியே தீரவேண்டுமென்பதை தகநாயக்கே உணர்ந்து விட்டார் என்பதாகக் கூறினர். பொதுத் தேர்தலுக்கான வேலைகள் தொடங்கப்பெற்றுவிட்டன.

பொதுத் தேர்தல்கள் மார்ச் 19-ம் நாள் நடைபெறும். வேட்பாளர்கள் தங்கள் மனுக்களை சனவரி 4-ம் நாள் முதல் பதிவு செய்யலாம். புதிய பாராளுமன்றம் 30-3-1960 அன்று கூட வேண்டும்.

சிலோன் தொழிலாளர் காங்கிரஸ் கடந்த பொதுத் தேர்தலில் ஒரு இடத்திற்குக் கூடப் போட்டியிடவில்லை. ஆனால் வரும் தேர்தலில் 30 இடங்களுக்குப் போட்டியிடுமென்று அறிகிறோம்.

இதற்கிடையே அத்தனகல்லா, வவுனியா, கோப்பாய், காலவேவா ஆகிய நான்கு இடங்களில் நடைபெறவிருந்த இடைத் தேர்தல்கள், பொதுத்தேர்தலால் விட்டு விடப் பட்டன.

**விலக்கமும் வெளியார் கருத்தும்**

பதவி விலக்கப்பட்ட ஐந்து அமைச்சர்களும், (திருவாளர்கள் இலங்க ரத்தினே, செயசூரியா, கலுகல்லா, எம். பி. டிசொய்சா, மைத்திரிபால சேனநாயக்கே ஆகியோர்) தகநாயக்கேயை வீழ்த்த முனைவதாக அறிகிறோம்; பண்டாரநாயக்கே மாண்டதும் தலைவனில்லா இலங்கை, மாலுமி இல்லாத கலம்போலாயிற்று. உடன் நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்காகவும், ஆட்சியில் ஒரு தலைவனை அமர்த்துதற்காகவும் கூடி முயன்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் தகநாயக்கேயின் பெயரை கவர்னர் செனரல் ஆலிவர் எர்னஸ்ட்குணதிலகேயிடம் ஒருமனதாகக் கூறினர். அதன்படியே தகநாயக்கேயும் பிறரும், மேற்படி கட்சியின் சார்பில் பதவியேற்று அமைச்சரவை அமைத்தனர். ஆனால் தகநாயகே தன் மூப்பாக அவர்மீது நம்கையில்லை என்று தெரிவித்த அக்கட்சியையும், உதறித் தள்ளி நடந்தார். அதன் சார்பில் தன்னொடு அங்கம் வகித்த ஐவரைத் தள்ளியிருக்கிறார். எனவே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களெல்லாம் கவர்னர் செனரலிடமும், பேரரசியாரிடமும் முறையிட்டிருக்கின்றனர். "யாரால் பதவிக்குக் கொண்டு வரப்பட்டாரோ அவர்களையே உதறித் தள்ளியவரும், அவர்கள் நம்பிக்கையை முழுக்க முழுக்க இழந்தவருமான ஒருவரை பதவியில் வைத்திருப்பது தவறு. உடனே விரட்டுங்கள்" என்றும் வேண்டிக்கொண்டனராம். —இப்படியும் அறிகிறோம்.

இலங்கையில் வந்த அரசியல் குழப்பங்களைப் பார்த்த "சிட்னி மார்னிங் எரால்ட்" என்ற ஏடு (சிட்னியிலிருந்து வெளிவருவது) "சட்ட ஒழுங்கற்ற நிலையை நோக்கி" என்ற தலைப்பில் ஒரு விளக்கவுரையை வெளியிட்டுள்ளது. ஈழத்து அரசியல் நிலை இன்றைய தினம் அராசகப் பதையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும், கடந்த பத்து ஆண்டுகளாக இருந்து வந்த மோசமான நிலை இப்போது மிக மோசமாக வளர்ந்திருக்கிற தென்ற குறிப்புப்படவும் அந்த ஏடு எழுதி யிருக்கிறது.

"இலங்கையே ஆசியாவில் அமைதியான நாடு; பாதுகாப்புள்ள நாடு என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் கவர்னர் செனரல் அவர்கள் பெருமை பேசிக் கொண்டார்கள். ஆனால் இன்றோ ஆசியாவின் எந்த நாடும் அப்படிப் பறைசாற்றிக் கொள்ள வாய்ப்பில்லை. ஒவ்வொன்றும் இருண்ட சூழ்நிலையை அல்லது தெளிவில்லாது குழம்பிய அரசியல் எதிர்காலத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் ஓர் உறுதியான அரசாங்கத்தை எதிர்பார்ப்பது பகற் கனவே" என்றும் "சிட்னிமார்னிங் எரால்ட்" எழுதுகிறது.

'சிலோன் டெயிலி நியூஸ்' என்ற ஏடு எஸ். எல். எப். பி. யினரை கோமாளிகளென்றும், காலமறியாதவர்களென்றும் எழுதியுள்ளது. அத்தோடு "வருகிற பொதுத் தேர்தல் நேரத்தில் எஸ். எல். எப். பி. கட்சி இன்னும் பலவாறகச் சிதறி, ஒருவருக்கொருவர் தாக்கிக் கொள்வர். அப்போது பொது மக்கள் கட்டணமில்லாமலே கேலிக்குரிய காட்சிகளை கண்டு களிக்கலாம்" என்றும் எழுதியுள்ளது.

**துப்புத் துலக்கினர்**

பண்டார நாயக்கே கொலை வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. லண்டன் ஸ்காட்லாண்ட்யார்டிலிருந்து, சீப் இன்ஸ்பெக்டர் ஜேம்ஸ் மக்கேயும், இன்ஸ்பெக்டர் ஹக்வில்லியம்பக் அவர்களும் இலங்கைக்கு வந்திருந்து இவ்வழக்கில் துப்புத்துலக்கினர். ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்கள் போக, அவர்களால் குறிப்பிடப்பட்ட வேறு சிலரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ★




-௨-

சாட்சி, கூண்டிலேறியதும் 'சத்தியமாகச் சொல்கிறேன்' என்று ஏன் சொல்லச் சொல்கிறார்கள் தெரியுமா? அந்த ஒன்றையாவது அவன் உண்மையாகச் சொல்லட்டும் என்றுதான்!

வக்கீல்கள் கருப்பு ஆடை அணியவேண்டும் என்று விதி வகுத்தது ஏன் தெரியுமா?

சட்டத்தை எப்போதும் அவர்கள் இருட்டிலேயே வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத்தான்!

நீதிபதி தீர்ப்பளிப்பதற்கு முன்னால் மன்றத்தின் (ஜுரர்களின்) கருத்தைக் கேட்பது ஏன் தெரியுமா? தான் மட்டுமே தனியாகக் குற்றம் புரிய மனமில்லாததால்தான்!

நீதிமன்றங்களை கீழ்மன்றம், மேல்மன்றம், உயர் மன்றம் என்றெல்லாம் ஏன் வகுத்திருக்கிறார்கள் தெரியுமா?

ஒருமுறை சட்டத்தை நம்பி உள்ளே புகுந்த கட்சிக்காரன் ஆயுள்காலம்வரை அதிலேயே புகுந்து சுற்றவேண்டும் என்பதற்காகத்தான்!

கோடைக்காலத்தில் ஒரு மாதம் நீதிமன்றங்களை ஏன் மூடுகிறார்கள் தெரியுமா?

கட்சிக்காரர்கள் வக்கீல்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை அந்த மாதத்திலாவது சம்பாதிக்கட்டும் என்றுதான்!

மஞ்சள் கடுதாசி (இன்சால்வெண்ட்) கொடுத்தவர்களில், பட்ட கடனுக்காகக் கொடுத்தவர்களைவிட வக்கீல்களுக்குப் 'பீஸ்' கொடுத்தவர்கள் அதிகம்!

தெளிவாகத் தெரியும் உண்மைகளை சிலர் மறைக்க விரும்புவதால் சட்டம் அவர்களை ஆயுள் முழுக்க இழுத்தடிக்கிறது!

கடன் பட்டவர்கள் உண்மையாக நடந்துகொண்டால் 'சிவில்' சட்டங்களுக்கு வேலை இல்லை!

குற்றம் புரிந்தவர்கள் உண்மையைச் சொல்லிவிட்டால் 'கிரிமினல்' நீதிமன்றங்கள் தேவையில்லை!

மனிதனின் உண்மையை மறைக்கும் குணம்தான் சட்டங்களை உற்பத்தி செய்தது!

உற்பத்தி செய்யப்பட்ட சட்டம் அந்த உண்மையை இறுதிவரை மறைப்பதற்குத் தானும் துணை புரிகிறது.

தடுப்பதற்குப் போட்ட வேலியே அழிவிற்குத் தலைமை தாங்குகிறது.

நியாயம், நீதி இவையெல்லாம் மிகவும் அலங்காரமான சொற்கள்.

குற்றம் புரிந்தவனும் தனக்கு நியாயம் கேட்கிறான். குற்றத்திற்கு ஆட்பட்டவனும் தனக்கு நியாயம் கேட்கிறான். யாருக்கு அதை வழங்குவது என்பதைப் பணம் முடிவு செய்கிறது.

பாவம், நீதிபதிகள்!

உண்மையைக் கண்டுபிடிக்க அவர்களும் பல தலைமுறைகளாகப் பாடுபட்டு வருகிறார்கள்,

எப்போதாவது அதிசயமாக உண்மையைக் கண்டு பிடித்தும் வருகிறார்கள்.

ஆனாலும் அது உண்மையல்ல என்று எதிரியின் வக்கீல் சாதிக்கிறார்.

அப்பீல் என்ற பெயரிலே மேல் நீதிமன்றம் அந்த உண்மையை மேலும் போட்டு உருட்டுகிறது.

இப்போது நம்மில் யாருக்கும் நியாயம் தேவை இல்லை!

நியாயத்துக்கே நியாயம் தேவைப்படுகிறது.

விபசாரம் செய்யக்கூடாது என்கிறது சட்டம்.

அந்த சட்டத்தின்படி விபசாரத்தில் ஈடுபட்டவர்களில் பெண்ணைமட்டும்தான் தண்டிக்க வேண்டும் என்பது விதி.

குற்றத்திற்கு முதற் காரணம் ஆடவனாக இருந்தாலும் சட்டம் அவனை சாட்சியாக ஏற்றுக்கொண்டு குற்றக் கூண்டிலே பெண்ணை ஏற்றுகிறது!

'ஆடவனுக்கு களங்கமில்லை' என்னும் முட்டாள்தனமான சமூக விதியை சட்டம் அப்படியே பின் பற்றுகிறது-

"நடுரோட்டிலே நின்று கண்காட்டினாள்-வாலிபனின் கையைப் பிடித்து இழுத்தாள்-அப்போது அந்த வழியாக வந்த இன்ஸ்பெக்டர் அவளைக் கைது செய்தார்"-என்று வழக்குத் தொடரப்படுகிறது.

எப்பொழுது எங்கே விபசாரம் நடந்தாலும் அப்பொழுது இன்ஸ்பெக்டர் அங்கே வந்துவிடுகிறார்.

சட்டம் இன்ஸ்பெக்டர்களை 'கிருஷ்ணவதாரம்' எடுக்க வைக்கிறது-

நாம் தெருவில் போகும்போது எந்தப் பெண்ணாவது, 'வா இன்பம் தருகிறேன்'-என்று கூப்பிடுகிறாளா?

நம்மில் யாருக்கும் அந்த அனுபவம் இல்லை.

இன்ஸ்பெக்டர் வருகிற நேரம் பார்த்து, காலணா பெறாத ஆடவனைக் கையைப் பிடித்து இருக்கிறாள் ஒருத்தி.

வேறொன்றும் இல்லை.

சட்டத்தின் காவலர்கள் குறிப்பிட்ட அளவு குற்றத்தைக் கண்டுபிடித்தால் பதவியும் பரிசும் கிடைக்கும். அதற்காக அவர்கள் குற்றத்தை உற்பத்தி செய்கிறார்கள்.

நாலு திங்கள் சிறைவாசம் நானும் புரிந்திருக்கிறேன். ஆறு திங்களுக்குமேல் சட்டத்தைத் நாடி அலைந்துமிருக்கிறேன்.

போராட்டத்தில் ஈடுபட்ட எனக்குப் பதினெட்டுத் திங்கள் தண்டனை விதித்தார்கள்.

என்னோடு சேர்த்து, போராட்டத்தில் சம்பந்தமில்லாதவர்களுக்கும் அதே தண்டனையை விதித்தார்கள்.

மாடு விற்கப் போனவர்கள், பால் விற்கப் போனவர்களை யெல்லாம் சட்டம் போராட்டக்காரர்களாக்கிற்று!

நீதிபதி சட்டத்தைத் துலக்கி உண்மை'யைக் கண்டு பிடித்து அவர்களுக்கும் தண்டனை விதித்தார்.

எனக்குச் சிரிப்பாக வந்தது-

ஒரு நாள் என் கையிலே ஆட்சியைக் கொடுத்தால் நாட்டிலே உள்ள சில நீதி மன்றங்களை நெற் கிடங்குகளாக மாற்ற உத்தரவிடுவேன்.

வேடிக்கையான சட்டம். வேடிக்கையான நீதிபதிகள்.

சந்தேகத்தின் பேரில் ஒருவன் கைது செய்யப்படுகிறான். "ஜாமீன் கொடுக்க ஆள்உண்டா" என்று நீதிபதி கேட்கிறார். இல்லையென்றால் உடனே தண்டித்துவிடுகிறார்.

ஜாமீன் கொடுக்க ஆள் இல்லாததே சட்டப்படி ஒரு பெரிய குற்றமாம்.

சிறைச்சாலையில் நூற்றுக்கு நாற்பது பேர் இந்த வகையிலே வந்தவர்கள்.

ஆமாம்!

சட்டம் புதிய புதிய குற்றவாளிகளை விளைச்சல் செய்கிறது.

குற்றம் என்னும் நிலத்தை வக்கீல்கள் உழுகிறார்கள்; சாட்சிகள் விதை விதைக்கிறார்கள்; பணம் மழை பொழிகிறது; விளைந்த பயிரை நீதிபதிகள் அறுவடை செய்கிறார்கள்.

விடிந்துவிட்ட பொழுதுக்கு இரவைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால் முடிந்துவிட்ட நிகழ்ச்சி சட்டத்தைப்பற்றிக் கவலைப்படுகிறது.

நான் நிரபராதி என்று என் மனதிற்கு நிச்சயமாகத் தெரிகிறது.

ஆனால் சட்டம் அதற்கும் சாட்சியங்களைக் கேட்கிறது.

திருமண வீடுகளிலே மேளதாள ஓசை முழங்குகிறது. புத்தாடை உடுத்திப் புதுப் பொலிவு கண்டு ஆண்களும் பெண்களும் சிரித்து மகிழ்கிறார்கள்.

திருமண வீடு கண்கொள்ளாக் காட்சியாகிறது.

இழவு வீட்டிலும் கூட்டம் இருக்கிறது.

சிலர் அழுகிறார்கள்.

சிலர் அலறுகிறார்கள்.

சிலர் சிலையாகச் சமைந்துபோய் உட்காருகிறார்கள்.

ஓலமும் ஒப்பாரியும் ஊரெங்கும் கேட்கின்றன.

ஒரு வீட்டில் சிரிப்பைக் கண்டேன். ஒரு வீட்டில் அழுகையைக் கண்டேன்.

நீதிமன்றத்திற்குப் போனேன்.

அது திருமண வீடாகவும் இல்லை. இழவு வீடாகவும் இல்லை. முகத்தில் களையே இல்லாத பதுமைகள்; இதயத்தில் இரக்கமே இல்லாத பிராணிகள்! ஒவ்வொரு பகுதியிலும் பிணங்களைப்போல நடந்துகொண்டிருந்தார்கள்.

ஆமாம்; இன்பத்துக்கும் துன்பத்துக்கும் இடையிலே உள்ள குழப்ப உலகம் நீதிமன்றம்.

குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான்; மனிதன் சட்டத்தைப் படைத்தான்; சட்டம் மனிதனைப் பழையபடி குரங்காக்கிவிட்டது! ★

அடுத்த இதழில்: "கண்ணீர்".



# கை தேர்ந்த திருடர்கள்

சென்னை மாநகராட்சியின் பெருமைகள் பலப்பல. சென்னை மாநிலத்து மக்களுக்கு உள்ளாட்சித் துறைகளில் ஆட்சிப் பயிற்சி தருவதற்கு வழிவகுத்தார் ரிப்பன் பெருமகனார். அவரது பெயர் கூறி நிமிர்ந்து நிற்கும் கட்டடத்தில் ஒய்யாரமாக இயங்கி வருகிறது சென்னை மாநகராட்சி.

இதில் காங்கிரசார் கொலுவிருந்த போது நடந்த பலப்பல நிகழ்ச்சிகள், ரிப்பன் பெருமகனாரின், கனவுகளையும் வரிவழங்குவோரின் ஆசைகளையும் நசுக்கியிருக்கின்றன.


அன்னார் ஆட்சிக்காலத்தில் பலப்பல புதுவரிகள் விதிக்கப்பட்டும், அவை கடுமையாக விதிக்கப்பட்டும் வந்தன. எனினும் காங்கிரசாரால், மாநில அரசிடம் கடன் வாங்காமல் நிர்வாகத்தை நடத்த முடியவில்லை. இவ்வாறு மாநில அரசிடம் பல இனங்களில் பல முறைகளில் கடன் வாங்கியதால் காங்கிரசு மாநகர் ஆட்சியினர், ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களை வட்டியாகக் கொட்டியழ வேண்டியதிருந்தது. இதனால் பல்வேறு திட்டங்களுக்குப் பயன்பட வேண்டிய பொது மக்களின் வரிப் பணம் வட்டி செலுத்துவதிலேயே வீணாயிற்று.

கடந்த 1958 ஏப்ரல் முதல், 1959 மார்ச் முடிய உள்ள ஓராண்டிற்கு, காங்கிரசார் செலுத்திய வட்டிகளின் பட்டியலைப் பாருங்கள் :-

| | | |
|---|---|---|
| மானேஜ்மெண்ட் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ரூ. | 2290-24 |
| கல்விப் பிரிவினர் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 2966-84 |
| போக்குவரத்துப் பிரிவினர் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 2,33,838-95 |
| பொது நலப் பிரிவினர் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 13,823-82 |
| ,, ... | ,, | 1,18,755-86 |
| ,, ... | ,, | 1,73,046-96 |
| கால்நடைப் பண்ணைப் பிரிவினர் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 1019-93 |
| பொது நலப் பிரிவினர் வாங்கிய கடனுக்கு வட்டி (ஓர்க்சாப்)... | ,, | 6756-77 |
| ஷை (மார்க்கெட்) வட்டி ... | ,, | 14,941 03 |
| ,, (தோபிகானுக்கள்) வட்டி... | ,, | 4967-22 |
| ,, (மத்திய லாரி நிலையம்) வட்டி... | ,, | 3176-04 |
| ,, (குளிர்கிடங்கு) வட்டி ... | ,, | 5466-96 |
| ,, (விளையாட்டுத் திடல்கள்) வட்டி ... | ,, | 9978-07 |
| நிலச் சீர்திருத்தத்திற்காக வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 1,80,031-28 |
| நகர் அமைப்புப் பிரிவினர் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 1,05,323-72 |
| மின்சாரப் பிரிவினர் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 53,775-82 |
| நீர் வழங்கு துறையினர் வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 4,97,671-47 |
| ஷியார் வடிகால் கடனென வாங்கிய கடனுக்கு வட்டி ... | ,, | 3,67,077-13 |

இவற்றைக் கூட்டினால் ஓராண்டுக்கு மட்டும் காங்கிரசார் செலுத்திய வட்டிகளின் மொத்தத் தொகை தெரியும். எனின் 12 ஆண்டுகளுக்கு அவர்கள் செலுத்திய வட்டி எவ்வளவு? காங்கிரசார் தம் காலத்தில் மொத்த வருமானத்தையும் சிந்தாமல் சிதறாமல் செலவழித்திருப்பார்களேயானால், கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது; அதனால் வட்டியும் கொடுக்க வேண்டியதிருந்திருக்காது. காங்கிரசு மாநகராட்சியினர் பொதுப்பணத்தை, சுய நல நோக்கோடு செலவழித்ததாலும், குத்தகை ஊழல்கள் பல நடைபெற்றதாலுமே இப்படிக் கடன் வாங்க வேண்டிய நிலைகள் ஏற்பட்டன என்று நாம் சொன்னால் அது தவறில்லை.

எழுதியவர் :



சிட்டிபாபு எம். சி.,
சென்னை மாநகராட்சி.

நமது கழகமோ ஆட்சிக்கு வந்து ஒன்பது திங்களுக்குள்ளாக ஒரு சாதனையைச் செய்து காட்டியது. புதிய வரிகள் போடப் படவில்லை. ஏற்கனவே இருந்த, சில பல வரிகள் நீக்கப்பட்டிருக்கின்றன, என்றாலும் கழகத்தின் ஆட்சியில், மாநகராட்சிக் கருவூலத்தில் ஒரு கணிசமான தொகை மிச்சம் காட்டப்பட்டிருக்கிறது.

வாழத்துடிப்போரே! இப்போது சொல்லுங்கள், ஆளத்தெரிந்தவர் யாரென்று ?

★

நலம்பாடி வருகிறது, கடிதம்! நலமே பெரிதும் விழைகிறேன்! தமிழ் சுகமா? தமிழ்ப் பாட்டு பாடி வருந் தாங்கள் சுகமா? 'சுகமே' தான் – அறிகிறேன்!

"தென்றல்" கொண்டு வந்து வரும் தத்துவம்-ஞானப் பேருண்மையும், முல்லை இல்லையெனாது வாரித் தரும் நலம் பொங்கிய தத்துவமும், தங்கள் இதயப் பாங்கினை அழகுற எடுத்துச் சொல்கின்றன. நிறைய எழுதிக் குவியுங்கள்! வரண்ட தத்துவம் மாறி, வாழ்க்கைத் தத்துவம் தமிழக இலக்கியச் சோலையிலே மணம் கொட்டுகிறது.

கட்சி, மதம், இனம் மறந்து பாராட்டு செய்யப்பட வேண்டியவர். அஞ்சாத்தன்மை சொல்லும் "நான்" – நான்மட்டுமா மகிழ்ந்தேன் ? இலக்கிய மன்னர்கள் சிரந்தாழ்த்துகின்றனர். உங்கள் "நான்" தன்மையைப் பார்க்கும்போது, நீங்கள் கவிஞர் அல்ல, ஞானி எமர்சன்! ஞானியின் உத்வேகம் தொனிக்கிறது சித்தார்த்தனைப் போல் பேசுகிறீர்கள் – விவேகானந்தரைப்போல் சொல்கிறீர்கள் – தாகூரைப்போலப் பாடுகிறீர்கள். அவர்களின் "எல்லாம்" நீங்கள்! உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல!

திரையிலே இலக்கியம் புகுத்திய தாங்கள், இலக்கியத்திலே தத்துவம் சொல்கிறீர்கள்! நாவல், சிறுகதை மெள்ள மெள்ள மறைகிறது; தத்துவம் அரும்பு கட்டுகிறது, உங்கள் வாயிலாக!

## ஆசிரியத் தோழருக்கு.

தத்துவம் சொல்லத் தமிழகத்திலே யாருமில்லையா என்று சிந்திக்கும் நிலையில், தாங்கள் கண்ணுக்குத் தென்படுகிறீர்கள்.

அரசியல் வானிலே உதயசூரியன் உதயமானதைப்போல, தமிழ் எழுத்துத் துறையிலே–எழுத்தாளர் சங்கத்திலே–நமது அப்பா அவர்கள் இடம் பெற்றிருப்பது, அப்பாவின் நன்முயற்சி எழுத்தாளர் சங்கத்திலே மறுமலர்ச்சி–புதுமை தோன்ற ஏதுவாகும். என்ன ஐயம்!

தாங்கள் எழுதிய பாண்டிமாதேவி புத்தக வடிவம் எம்மட்டுள்ளது. பொங்கல் பரிசாக எல்லோருக்கும் கிடைக்க வழி பிறக்குமா? ஏன் இந்த அமைதி...? "கண்ணதாசன் தத்துவம்" நூல் எப்போது கிடைக்கும் ? தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் பரிசு பெற வேண்டுமல்லவா ? தத்துவம்-வரிசையில் பரிசு பெற வேண்டிய ஒன்று; எனவே, நூல் வடிவிற் கொணர்க!

தங்களது இலக்கியங்களை–கவிதைகளை 15 மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்வதறிந்து மகிழ்வு. "பிறவிக் கவிஞன் வாழ்கிறான்...!" சாகித்ய அகாடமியாருக்கு மெத்த நன்றி! அந்த இதழ் எங்களுக்கு கிடைக்க வாய்ப்புண்டா? புத்தக வடிவில் வருகிறதா?

இன்னொரு வேண்டுகோள்:—

பள்ளிக் குழந்தைகள் படிவம் படிக்கும் மாணவர்களுக்குத் தேவையான கவிதைகள்–இயற்கைப் பொலிவு பற்றிய–பொதுவான இலக்கியம்பற்றிய கவிதைகளை எழுதி வெளியிடமாட்டீர்களா ? அப்பொழுதுதான் சென்னை அரசினரால் ஒப்புக்கொள்ளப்படும் புத்தகங்களிலே இடம் பெற வாய்ப்புண்டு; வசதியுண்டு! வாணிதாசன்–பாரதிதாசன் கவிதைகள் இடம் பெறுகின்றனவே! நீங்கள் செய்வீர்களா ? 1960-க்கு, அழகு செந்தமிழ் நிலத்திற்கு, மேலும் பல நல்லிலக்கியம் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தத்துவம்–20 கட்டுரைகள் எழுதிய பின்னர் இயற்கையின் கவின் மிக்க வனப்புப்பற்றிய கவிதைகள்–புதுமையில் தேவை. 'அழகின் சிரிப்பு' போன்றதாக–அதைவிடச் சிறப்பு மிக்கதாக இருத்தல் வேண்டும்.

தங்கள் கவிதைகள்–அன்றி காவியமாவது, சென்னை மாநில நூல் நிலையங்கள் அனைத்திலும் இடம் பெறுவதற்கான வழிகாணுங்கள். மாங்கனி–பாண்டிமாதேவி இரண்டும் இடம் பெறத் தகுது வாய்ந்தவையே! நீங்கள் விரும்பினாலும்–விரும்பாவிடினும், நூல் நிலையங்கள் அனைத்திலும் இடம்பெற வேண்டும் என்பது எனது ஆசை!

நீங்கள் வளர்க்கும் இலக்கியம் வாழட்டும்!

நீங்கள் என் தலைவர்.

ஏனெனில் உங்கள் 'நான்' தன்மையில் எனக்கு நம்பிக்கையுண்டு.

"செந்தில்",
திருநெல்வேலி.

★

தாங்கள் சமீபத்தில் தமிழர்கட்கு அளித்து வரும் தத்துவங்கள்நிறைந்த கட்டுரைகள், தாமஸ்கோலரிட்ஜ் கற்பனைத்திறத்தின்பால் ஒப்பிடத் தக்கனவாகும். தங்கட்கும், பிற கவிஞர்கட்கும் ஒருவேறுபாடுண்டு. அவர்கள் "மாயை" உலகத்தில் உலவி, வந்ததோர்; வருவோர். தாங்களோ பகுத்தறிவின் வழிச் சென்று இனிமையும், எளிமையும் தவழத் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறீர்கள். இது மெத்த வரவேற்கத் தக்கதாகும்.

தங்கள் புகழை அழிக்க, அறிவைப் பழிக்க எத்தனை பேர்– முயன்றாலும், அம்முயற்சிகள் இனி வெல்லா. அவற்றையெல்லாம் இத்தகு கட்டுரைகள் வென்று, தங்கள் புகழை என்றென்றும் நிலைநிற்கச் செய்யும்.

உலகம் பயன் பெறத்தக்க நல்லவைகளைக் கூறுகிறீர்கள். உலகம் உங்களை என்றும் போற்றும்!

அன்புள்ள
ஆ. இராமச்சந்திரன் பி. எஸ்சி.
சென்னை–1.

★

கவிஞரை விளைத்த கண்ண
தாசரே கவிஞ ரேறே
கவிஞரை ஊக்கு வித்துக்
கவிபல புனையச் செய்தே
புவிதனில் புதுமை யான
புதுநெறி கண்டீர்; மேலும்
கவிதைகள் தந்தே எங்கள்
கனவுகள் பலிப்ப தெந்நாள் ?

ம. முகமது மைதீன், சென்னை-2.


## "கல்வி"

ஆங்கிலம் எளிய தமிழ் விளக்கத்துடன் எழுதவும் படிக்கவும், பேசவும் ஒரே வருடத்தில் தபால்மூலம் கற்றுக்கொடுக்கப்படும்.

மாதம் ரூ. 2

விவரங்கள் இலவசம்.

தி நியூ கல்விஅசோசியேஷன்
திருப்பூர் (கோவை மாவட்டம்.)

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

பட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர்கள், இருந்தவர்கள், பதிவு செய்யப்படாத ஊழியர்களுக்குப் போதனைகளைத் தருவார்களே தவிர, அவர்களுடைய முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கமாட்டார்கள்! தங்களுடைய ஆதரவினைக் காட்டிலும் சென்னை அரசினர்தான் இதனைச் செய்ய வேண்டுமென்று சொல்லிவிடுவார்கள்! அண்மையிலே நடைபெற்ற நெல்லை மாநாட்டில் முன்னாள் தண்டல்நாயகம் பாஸ்கரத் தொண்டைமான் அதனைத்தான் செய்திருக்கிறார்! பதிவு செய்யப்படாத ஊழியர்களிலேயே பாதகம் செய்வோரும், பாதிக்கப்படுவோரும் இருக்கிறார்கள்! தாசில்தார் என்று அழைக்கப்படும் வட்டார ஆட்சித் தலைவர் எழுத்தராக இருக்கும் பதிவு செய்யப்படாத ஊழியரை அடக்கியாள அதிகாரம் பெற்றுள்ளார். இவரைப் பற்றிய சரியான அல்லது தவறான முடிவுகளை எடுத்து ரகசியக் குறிப்பில் எழுதி வைக்கும் உரிமையைப் பெற்றுள்ளார்! ரகசியக் குறிப்பு முறையை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற தாசில்தார்கள், தவறான கருத்தினைக் கொண்டு எழுதமாட்டார்கள் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை! கருத்துரை வழங்குவதற்கு இவர்கள் மறுப்பதுமில்லை! இவர்களுக்கிடையே எழுகின்ற பூசல்கள் மறைவதற்கு வழி ஒன்றே ஒன்றுதான்; இரு ரகத்தாரும் வேறாகப் பிரிந்துவிட வேண்டும்! இவர்களின் மாறுபட்ட நிலையைக் கண்டு பொதுமக்கள் ஒருவருக்கொருவர் தனித் திசையிலே இருப்பதை உணர்கிறார்கள்; உதவியளிக்கத் தவறுகிறார்கள்! பதிவு செய்யப்படாதவர்களின் பாசமும் நேசமும் பண்பும் பழக்கமும் பாராட்டத்தக்க வகையிலே இல்லையென்பதை அவர்களோடு குறுகிய காலத் தொடர்பு கொண்ட எவரும் எளிதில் உணரமுடியும்! அரசினர் ஊழியர்களின் தேவைகளை அரசுதான் கவனிக்க வேண்டும் என்ற நிலை ஊதிய உயர்வோடு சரி. ஆனால் மற்ற குறைபாடுகளைத் தவிர்க்க வேண்டிய பொறுப்பும் கடமையும் பதிவு செய்யப்படாத ஊழியர்களின் நல்லெண்ணத்திலே தான் உள்ளன.

சென்னை அரசினர் ஊழியர்களிடையே ஊழல்கள் நிறைய உண்டு. இதனை அவர்கள் ஏற்றுக்கொண்டு திருத்திக்கொள்ளத் துணிய வேண்டும். அரசினர் ஊழியரிடையே ஒற்றுமைப் பண்பு குறைவாகஇருப்பதற்குக் காரணம் என்ன என்பதையும் பெரிதாக ஆராய்ச்சி செய்யத் தேவையில்லை. எவரேனும் ஒரு எழுத்தர் இரண்டு மாதம் அல்லது ஒரு மாதம் விடுமுறை பெற்றுவிட்டால் அவர் அந்தக் காலத்துக்குரிய ஊதியம் பெற ஆறு திங்களாவது காத்திருக்க வேண்டும். இந்தத் தடை செய்வோர் மாவட்டத் தண்டல் நாயகங்களும் மாவட்டத் துணை தண்டல் நாயகங்களும் மற்றவர்களும் அல்ல. அதனைக் கவனிக்க வேண்டிய பதிவு செய்யப்படாத அரசினர் ஊழியரின் கடமை தவறுகின்ற தட்டிக் கழிக்கின்ற செயல்தான். ஒரே அலுவலகத்திற்குள் நடைபெற வேண்டிய எத்தனையோ சம்பளக் காரியங்கள், ஆண்டுதோறும் தரப்பட வேண்டிய ஊதிய உயர்வுகள், பல ஆண்டுகளுக்குப் பின்புகூட நிறைவேற்றப்படுவதில்லை; தரப்படுவதில்லை. பதிவு செய்யப்படாத ஊழியர்களிலேயே பல ரகம் உண்டு, அவர்களுடைய குறைகள் பலவகைகளாக இருப்பதுபோல. தாலுகா அலுவலகத்தவர் துணைத் தண்டல் நாயக அலுவலகத்தைச் சேர்ந்தோருக்கும், துணைத் தண்டல் நாயக அலுவலகத்தைச் சேர்ந்தோர், தண்டல் நாயக அலுவலகத்தே பணியாற்றும் பதிவு செய்யப்படாத ஊழியர்களுக்கும் அடங்கி நடக்க வேண்டும்; பயந்து பணிய வேண்டும் என்ற கட்டாய நிலையை நிரந்தரமாக உருவாக்கி வைத்திருக்கிறார்கள்! இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் தாசில்தார் என்ற அதிகாரி துணைத் தண்டல் நாயகம் அலுவலகத்துச் சாதாரண எழுத்தருக்குப் பயப்பட வேண்டும். டிப்டிக் கலெக்டர் அல்லது சப் கலெக்டர் எனப்படுவர்கள் கலெக்டர் அலுவலகத்திலேயிருக்கும் 'குமஸ்தாக்'களுக்குப் பேட்டி கொடுத்து தங்களைப்பற்றிய குறைகளைக் களைந்துகொள்ள வேண்டும். இவர்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிடுவார்கள் கடைநிலை ஊழியர்களிலே பலர்! கடைநிலை ஊழியர்களைத்தான் 'பியூன்'கள் என்கிறார்கள். உண்மையில் அவர்களே அதிகாரிகளாக இருக்கிறார்கள்! சில அலுவலகங்களில் 'கிளார்க்' என்பவருக்குத் தெரியாத பல செய்திகள் பியூன்களுக்குத் தெரியும்! பியூன்கள் எழுதமாட்டார்களே தவிர, தங்களுக்குத் தேவையான தாக்கீதுகளைச் சொல்லி எழுதி வாங்கி உயர் அதிகாரிகளிடத்திலே ஒப்புதல் பெறுவார்கள்!

சென்னை அரசினர் ஊழியர்களின் குறைபாடுகள் இப்படி எண்ணற்றவைகள் உள்ளன. கேட்கச் சுவையான செய்திகள் ஏராளமாகவும் இருக்கின்றன! காரியம் ஆக வேண்டுமென்றால் வெளியிலேயிருக்கும் பொது மக்களிடத்திலேயிருந்து 'லஞ்சம்' பெற்றுவிடுகிறார்கள் என்பது பொதுவான குற்றச்சாட்டு! அரசு ஊழியர்களிலேயே எத்தனையோ பேர் பதவி உயர்வுக்காகவும், நல்ல இடமாற்றத்திற்காகவும், சம்பள உயர்வுக்காகவும், 'அன்பளிப்புகள்' தர வேண்டிய நிலையிலே இருக்கும் இழி தன்மைகள் நிறைந்துள்ளன! இவையெல்லாம் அரசினர் ஊழியர்களுக்குள்ளே ஒற்றுமைப் பண்பை வளரவிடாமல் தடுத்து விடுகின்றன. நில வருவாய்த் துறையில் ஒவ்வோர் ஆண்டும் வரி வசூல் பாக்கி நிலைமைகளைக் கணக்கிட்டு முடிவெடுக்க வருட இறுதியில் கூடுவார்கள்! இதனை 'சமாபந்தி' என்று சொல்கிறார்கள்! உண்மையில் அங்கு 'சமாபந்தி' எப்போதும் நடைபெறுவதில்லையாம்! கிராம அதிகாரிகளின் கணக்குகளைக் கவனிக்க வேண்டிய கணக்கர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் 'காணிக்கை' வைத்த பிறகுதான் கணக்குகளைத் தொட்டுப் பார்ப்பார்களாம்! கடமை உணர்ச்சி நிரம்பிய அந்த ஏழை என். ஜி. ஓ. கிராம அதிகாரிகளிடமிருந்து 'தொகை' கிடைக்காவிட்டால், அந்தக் கணக்குகளைக் கவனத்துக்குரியவைகளாக எடுத்துக் கணித்திடமாட்டாராம். அத்துடன் குறிப்பிட்ட கிராமக் கணக்கர் கணக்குகளைச் சரிவர எழுதவில்லை என்று மாவட்டத் துணைத் தண்டல் நாயகத்துக்கும், மாவட்டத் தண்டல் நாயகத்திற்கும் புகார் செய்வாராம். கிராம அதிகாரிகளைத் தணிக்கை செய்கின்ற 'ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள்' என்று அழைக்கப்படும் பதிவு செய்யப்படாதவர்களிலேயே ஒரு பகுதியினர் தாங்கிக்கொள்ளும் தொல்லைக்கு அளவில்லையாம்! கணக்குகளைச் சரி செய்து கணிக்க வேண்டிய கீழ்த்தர எழுத்தர்களுக்குக்கூட சோப்பு, சீப்பு, கண்ணாடி, வாசனைத் தைலம், பரிசாகத் தந்துவிட்டுத்தான், விருந்து வகைகளைத் தயார் செய்வார்கள்! கிராம அதிகாரிகளிடம் கணக்காகத் தொகை வரவு செய்தால்தான் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் என்பவர் தண்டல் நாயக அலுவலகக் கணக்கர்களுக்குச் 'சப்ளைகள்' செய்ய முடியும். இவைகளையெல்லாம் தண்டல் நாயகங்களும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் கவலைப்படுவதில்லையே!

சென்னை அரசு ஊழியர்கள் மாபெரும் தவறென்று அவர்களே அறிந்த இதுபோன்ற செயல்களில் தங்களைப் பழக்கிக்கொண்டுவிட்டார்கள். 'மாமூல்' என்று சொல்லி மறைத்துவிடவும் முயல்கிறார்கள். ஏதேனும் வேலை செய்துவிட்டுக் காண்ட்ராக்டருக்குப் பணம் கிடைக்கிறதென்றால் அதிலே பங்குத் தொகை ஓவர்சியர், சூபர்வைசர், என்ஜினியர், பெரிய என்ஜினியர், மேஸ்திரிகள் என்ற இத்தனை பேருக்கும் கிடைக்க வேண்டுமாம்! இல்லையென்றால் இந்த வேலைக்குரிய 'பணம்'கிடைப்பதே கடினமாகிவிடும்! அரசினருக்குப் பணம் செலுத்தப்படும்போதும் 'சப் டிரசரி'யாக இருந்தாலும் சரி, அங்கே பியூனிலிருந்து எழுத்தர், தலைமைக் கணக்கர் ஆகியோருக்கும், 'ஸ்டேட் பாங்க்' என்றால் அங்குள்ளவர்களுக்கும் வகையான தொகைகள் தரப்பட வேண்டுமாம். இத்தனை வகையான செயல்களும் அரசில் உள்ள ஊழியர்களின் செயல் முறைகளாலேதான் உருவாக்கி வளர்க்கப்படுகின்றன. ஊழியர்கள் பதிவு செய்யப்பட்டவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடைநிலையிலே இருந்தாலும் உயர்நிலையிலேயிருந்தாலும் தங்களுடைய தவறுகளை உணர்ந்து போக்கிக் கொண்டால்தான் பொதுமக்களின் பார்வையிலே உயர்ந்த முறையிலே மதிப்பிடப்படுவார்கள். அரசினர் ஊழியர்களுக்குள்ள குறைகளை இத்தகைய தவறான ஊழல்கள் மறைத்துவிடுகின்றன. சென்னை அரசினரின் எந்தத் துறையை எடுத்து விவாதித்தாலும் பதிவு செய்யப்படாதவர்களின் அணிவகுப்பில் மனிதத் தன்மைக்கே புறம்பான பல குறைகள் இருப்பதை எவரும் அறியமுடியும். இவைகளை நீக்கிக்கொள்ளுவது இயலாத காரியம் என்று எந்த ஒரு என். ஜி. ஓ. நண்பரும் சொல்லிவிட முடியாது! எத்தனையோ மாநாடுகள் கூட்டுகின்ற அரசினர் ஊழியர்கள் தங்கள் மீது பொதுமக்கள் கூறுகின்ற குற்றச்சாட்டுக்களைப்பற்றியும் கொஞ்ச நேரம் விவாதிப்பது அவர்களின வருங் காலத்திற்கு வளம் பயப்பதாக இருக்கமுடியும்! என். ஜி. ஓவினரின் குறைகள் களையப்பட்டால் இந்த அரசினரைப் பணிய வைப்பது மிகவும எளிது! அவர்கள் நிச்சயம் தங்கள் முயற்சியிலே வெற்றி பெற முடியும். மத்திய பிரதேசத்து ஊழியர்கள் வழி காட்டுகிறார்கள்!

ராஜபால் பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
திண்டுக்கல்ரோடு, மதுரை



## இரங்கற் கூட்டம்.

26-12-59 அன்று சென்னையில் நாவலர் ச. சோ. பாரதியார் மறைவு குறித்து ஓர் இரங்கற் கூட்டம் நக்கீரர் கழகம், மாணவர் மன்றம், சென்னைத் தமிழாசிரியர் கழகம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்றது டாக்டர் அ. சிதம்பரநாதனார் தலைமையில் தோழர்கள் ப. சீவானந்தம், டி. செங்கல்வராயன். சா. அமீது மற்றும் பேராசிரியர் மயிலை சிவமுத்து முதலியோர் உரையாற்றினர். இரங்கற் தீர்மானம் ஒன்றும் நிறைவேறியது. நினைவுச் சின்னம் அமைத்தலும் வற்புறுத்தப்பட்டது. தலைவர்கள் தம்முரைகளில் குறிப்பிட்டவையாவன:

**டாக்டர் அ. சிதம்பரநாதர்:**

''வள்ளுவர் பெரிய அரசராக, அமைச்சராக இருந்தார் என்று கூறமுடியாது என்று கூறி-வள்ளுவர் உள்படு கருமத் தலைவராக, அரசன் வீட்டுச் செய்தியைக் கவனிக்கும்- அந்தரங்கச் செய்தியைக் கவனிக்கும் அந்தரங்கக் கருமராக இருந்ததாகத் தெரிய வருகிறது என்று காட்டியவர் பாரதியார்.

பாரதியார் கம்பராமாயணத்தைப் படிக்கக்கூடாது என்று சொல்லவில்லை. அவர் கம்பராமாயணத்தில் ஈடுபட்டார். ஆனாலும் திராவிடர்களுக்கு இழைத்த தீங்கினை எடுத்துக் காட்டி மறுத்து உரைக்க வேண்டிய இடத்தில மறுத்துரைக்கத் தயங்கியதில்லை. அதே நேரத்தில் கம்பன் பழி போயினான் என்று கூறத் தவறியதில்லை பாரதியார்.''

**ப. சீவானந்தம்:**

நான் 30 ஆண்டுகளுக்குமுன் மதுரைக்குச் சென்றபோது மதுரைப் பகுத்தறிவு மன்றத் தலைவராக இருந்த பாரதியாரைச் சந்திக்கலாம் என்றனர். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு காங்கிரசுக்காரர்எப்படிப் பகுத்தறிவு வாதியாக இருக்க முடியும என்று. திருவள்ளுவர் 'அஞ்சாமை'' என்று கூறுகிறாரே-அது பாரதியாருக்கு முற்றும் பொருந்தும். நான் சுயமரியாதைக் கோணத்திலிருந்தும், சாதி மறுப்புக் கோணத்திலிருந்தும் பார்த்திருக்கிறேன். அவர் பேசுகிற பேச்சு லட்சக் கணக்கான மக்களை ஈர்க்கின்ற பெரும் பண்பு கொண்டதாய் விளங்கியது. நக்கீரர் நக்கீரர் என்று சொல்லுகிறோமே-அவர் இந்த இருபதாம் நூற்றாண்டு நக்கீரராக விளங்கினார். அவர் எந்தக் கூட்டத்திலிருப்பினும் நடுநிலையாக இருந்து தனக்குப் பிடிக்காததைப் பிடிக்காது என்று சொல்லி மறுப்பார். எனக்குக் கடவுளே இல்லை. நான் வணங்கும் தமிழ்க் கடவுள் மறைமலை அடிகள். அந்த வரிசையிலே மறைமலை அடிகள் போன்று, திரு. வி. க.வைப் போன்று, சோமசுந்தரபாரதியாரும் எனது வணக்கத்திற்கு உரியவர். அவருக்குச் செய்யும் இறுதி வணக்கம் அவர் விட்டுச் சென்ற கருமங்களைத் தொடர்ந்து செய்வதேயாகும்.''

# செழியன் உலா

இப்போது இந்தியாவில் எல்லாம் கொள்ளை மலிவாய் விற்க ஆரம்பித்துவிட்டனவாம். காங்கிரசு ஏடுகள் அவற்றை எக்காளமாகவும் "காலம் கால"மாகவும் வெளியிட்டு ஆடுகின்றன. அண்மையில் இந்தியாவுக்கு வந்த ஒரு வெளிநாட்டுப் பிரதமர் 100 யானைகளை இரண்டு ரூபாய்க்கு வாங்கினாராம். இத்தனை யானைகளையும் அவர் எப்படிக் கட்டி வைத்துத் தீனி போடப் போகிறாரோ என்று அஞ்சினேன் நான். இந்தச் செய்தி முழுவதையும் படித்த பின்புதான், அவை தந்தத்தால் கண்ணுக்குத் தெரியாத அளவு நுணுக்கமாகச் செய்யப்பட யானைகள் என்று அறிந்தேன். ஆகா இந்தச் செய்தியோடு இன்னும் சில செய்திகளைச் சேர்த்துப் போடலாமே!

"இந்தியாவில் கொள்ளை மலிவு! மூன்று குமரிகளின் கற்பு பத்தே ரூபாய்தான்"

"உலகம் காணாப் புதுமை! தமிழகத்தில் மட்டுமே கிடைக்கும் அற்புத மலிவுச் சரக்கு! பிறந்து பத்து மாதம் கூட ஆகாத குழந்தைகள், ஐந்து ரூபாய்க்கு ஒன்று. பேரம் பேசுவோருக்குத் தனிச் சலுகைகள் உண்டு! முந்துங்கள்! முந்துங்கள்!"

"அரசியல் குழப்பங்களுக்குப் பெயர் போன சோற்றுப் பட்டாளங்கள் இந்தியாவில் குறைந்த விலையில் கிடைக்கின்றன! ஆளொன்றுக்கு எட்டணா வீதம் கூலிப் படை திரட்டி வர சோற்றுப் பட்டாளத் தளபதிகள் தயார்! தயார்! தேவைப்படுவோர் இந்தியாவிற்கு விரைந்து வருக!"—இப்படிப்பட்ட செய்திகளைப் போட்டால் வெளிநாட்டார்கள் எப்படிப் பொத்துக்கொண்டு வருவார்கள் தெரியுமா? காற்று வேகத்தில், எண்ண வேகத்தில், எண்ணற்றோர் ஓடி வருவர்! இந்தியாவில் வெளிநாட்டு வியாபாரம் இமயம்போல் பெருகும்!

x x x

"நேரு பெருமகனார் சீனாவிற்கு அடிக்கடிக் கடிதம எழுதுகிறாரே-இதனால் யாருக்கேனும் ஏதேனும் பயனுண்டா?"

"ஆகா! இப்போது அடிக்கும் கடுங் குளிரிலிருந்து சீனர்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள அந்தக் கடிதங்களைத் தானே பயன்படுத்திக் கொள்கிறார்கள்!"

"அது எப்படி?"

"என்னைக் கேளாதே கடந்த மாதக் 'கேரவனை' எடுத்துப் பார்!"

x x x

சர்தார் வேதரத்தினம் என்ற தடமார்பும், வீங்கு தோள்களும் கொண்ட ஒரு மனிதரை உங்களுக்குத்தெரியுமோ? இவர் ஆற்றி வரும் அற்புதச் செயல்களும், சொல்லி வரும் பொன் மொழிகளும் ஆயிரமாயிரம்! இப்படி அதிதீரரை இந்த இந்தியாவில் வைத்திருப்பது அழகல்ல! உடனே காந்தியாரின் சாம்பலைக் கரைத்த இடத்திற்கு இவரை அனுப்பி வையுங்கள்! பாவம் மனிதர்-என்னேரமும் காந்தி, காந்தி என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார். காந்தியார்சாம்பலைக் கரைத்த இடத்தில் இவரைக் கொண்டு போய் வைத்தால் அவர் அந்த ஏக்கம் தீரக் காந்தியார் புகழ் பாடிக்கொண்டிருப்பார்! அப்போதாகிலும் நாம் இவர் படும் துன்பத்தைக் கண்ணெதிரே கண்டு வருந்த வேண்டியிருக்காதல்லவா? இவர் அண்மையில் நெல்லையில், "தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் குறைந்துவிட்டது" என்று பேசினாராம். இதை எப்போது கண்டு பிடித்தார் இந்த ஆராய்ச்சிச்சிங்கம்? எப்படிக் கண்டுபிடித்தார்? இவரது தொகுதியிலேயே இவருக்குச் செல்வாக்குக் குறைந்து வருவதை அறிந்துகொள்ளாத இந்த...வீரர் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புக் குறைந்து வருவதை எப்படிக் கண்டு பிடித்தார்? இந்த ஐசக் நியுட்டனை-இந்த சி. வி. இராமனை-இந்த மைக்கேல் ரானடேயை, உடனே அனுப்புங்கள், நோபல் பரிசு தரப்படும் இடத்திற்கு!

x x x

சென்னை மவுண்ட்ரோடில் ஆச்சாரியார் மண்டப வாயில் பக்கம் உள்ள எழாம் எட்வர்ட் அரசர் சிலைக்குப் புது வர்ணம் பூசி அழகு செய்திருக்கிறார்கள் காங்கிரசார். காலம்போனகாலத்தில்—இந்தச் சிலைகளையெல்லாம் தூக்கி எறிய வேண்டும் எனச் சொல்லும் நேரத்தில்-இதை அழகு படுத்துவானேன்? காங்கிரசுறுப்பினர் ஒருவரைக் கேட்டபின்தான் தெரிந்தது.

சென்னை மாநிலத்திற்கும் சில பொருளியல் உதவிகளைப் பெறுவதற்காக ஐசனோவரையோ, அவரது ஆட்களையோ நேரடியாகச் சென்னைக்கு அழைத்து வந்து சென்னையைச் சுற்றிக்காட்டி உதவி கேட்கத் திட்டமிட்டிருந்தனராம். அப்படி அவர்கள் வரும்போது, இந்தச் சிலையைக் காட்டி "பார்த்தீர்களா! பிரித்தானியர் எங்களை விட்டுப் போன பின்பும், நாங்கள் பக்தி மாறாது அவர்கள் சிலையை வைத்துப் பூசை செய்கிறோம். நீங்களும் எங்களுக்குதவினால் கோவிலே கட்டிக் கும்பிடுவோம். பழனியாண்டவர் கோவில் பக்கம் ஓர் ஐக்காண்டவர் கோவில் கட்டுகிறோம். முருகர் கோவில் பக்கம் ஒரு ஹெர்ட்டர் கோவில் கட்டுகிறோம். ஆண்டுக்கொரு முறை காவடி தூக்கு விழாவும் கொண்டாடுகிறோம். நாங்கள் காவடி ஆட்டத்தில் பிரமாதப் பெயர் வாங்கியவர்கள் என்பதை தில்லி அரசேஒத்துக்கொண்டுள்ளது. அருள் புரிக; அதாவது பொருள் தருக!" என்று வேண்டுதற்பாப் படிக்கத்திட்டமிட்டிருந்தனராம். ஆனால் அந்தப்படு கொடுமைக்கார "ஐக்காண்டவர்" இந்தப் பக்கத்தைத் திரும்பிப் பார்க்கக்கூட மறுத்து விட்டாராம். அந்தச் சிலைக்குச் சாயம் பூசியது வீணாகி விட்டதாம். அவர்களுக்கு ஓர் "ஐயோ"!.

— மா. பாண்டியன்.

## பிறப்பு

"கலைப் பூங்கா" வின் துணை ஆசிரியர் திரு. தன. நடராசன் அவர்களின் துணைவியார், திருமதி. ராசாத்தி அம்மையார் காவேரிப் பட்டினத்தில் 4-12-59 இரவு 4-30 மணியளவில் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். தாயும்-சேயும் நலம்.


பொன்னுர் திராவிடத்திற்குத்
தென்றல் வழங்கும்
புதிய இலக்கியப் படைப்பு

# தென்றல்
# பொங்கல் மலர் 1960

திராவிட நாட்டின் பெருந்தலைவர்கள்
பேராராய்ச்சியாளர்கள்
கவிதை மன்னர்கள்
சிறுகதைச் சிற்பிகள்
அறிவியல் வல்லுநர்கள்

**அனைவரும் பொங்கல் மலரில் எழுதுகிறார்கள்**

★ **பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்** ஷேக்ஸ்பியர் பாணியில் எழுதியுள்ள அருமையான சிறுகதை யாழ்நங்கை.

★ **டாக்டர் அ. சிதம்பரநாதனார்** அவிநயக்கலை என்ற தலைப்பில் எழுதியுள்ள சுவையான கட்டுரை நடிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு நல்ல வழிகாட்டி.

★ **பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர்** அவர்கள் 'மதி' தென்சொல்லே என்று ஆணித்தரமானஎடுத்துக் காட்டுக்களோடு எழுதும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரை.

★ **பிலோ இருதயநாத்** ஆதிவாசிகள் பற்றி எழுதும் அற்புதமான கருத்துக்களடங்கிய கட்டுரை.

★ **இறைவா சாவாய்!** என்று கவிஞர் **சிவனடியான்** கடவுளுக்குச் சாபமிடும் தேன்கவிதை.

★ **கண்ணதாசன்** எழுதும் 'கல்லறை'—வினாவிடை நூறு.

நாவலர் **நெடுஞ்செழியன்** அவர்களின் கம்பீரமான புதுத்தோற்றம்.

அறிஞர் **அண்ணா** அவர்கள் மயிலோடு நிற்கும் காட்சி. இவை இரண்டும் தென்றல் மலருக்கென எடுத்த **டெக்னிக் கலர்ப்படங்கள்**.

இவை மலருக்கே
தனிச் சிறப்பு! தனி அழகு!!

ஏறக்குறைய 200 பக்கங்கள்
**விலை ரூபாய் இரண்டு**

இன்றே உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

★

தென்றல் :: சென்னை-6.


"தென்றல்" அளிக்கும் **இலக்கியப் போட்டிப் பரிசுகள்** விரிவான அறிவிப்பைப் பொங்கல் மலரில் காண்க.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.